ஜெம்ஸ் சத்தம்

Since 1972

ஜுன் 2017

கொஞ்சத்திலே
உண்மையாயிருந்தாய்,

அநேகத்தின்மேல்
உன்னை அதிகாரியாக
வைப்பேன். {மத் 25:23}

வாலிபர் ஒருநாள் கூடுகை - கடுவா

ஜெம்ஸ் சத்தம்

Since 1972

GEMS Satham

Transforming Peoples to Transform Nations

அன்பின் மடல்

சகோ.D.அகஸ்டின் ஜெபக்குமார்

அழைத்தும் பாரமே அழைப்பு – 10

உபவாசக் கூடுகை – 12

விடுமுறை வேதாகம பள்ளி – 15

வாலிபர் ஒருநாள் கூடுகை – 17

பணித்தளச் செய்திகள் – 18

முன்னேற்றப் பணி முகவரிகள் – 28

ஆங்கிலப் பள்ளி திறப்பு – 29

Published by

Gospel Echoing Missionary Society

Regd. office :

GEMS Educational Media Services
11,13th Cross street, New colony,
Chrompet, Chennai - 44
Ph. : 044-22386031, 044-22380295

Field office :

GEMS, Sikaria, Indrapuri - 821308
Rohtas Dist., Bihar , Ph. : 06184 - 234567
(Railway station & courier centre : Dehri on Sone)
Website : www.gemsbihar.org
E-mail : gems@gemsbihar.org

'ஜெம்ஸ்' என்பது,

Gospel Echoing Missionary Society

விசுவாச இளைஞர்கள் சிலரால் 1972-ம் ஆண்டு நிறுவப்பட்டு, 1979-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஓர் ஊழியம்.

பீஹார் மற்றும் அதன் அண்டை மாநிலங்களில் உள்ளோரைச் சந்திப்பதே இவ்வூழியத்தின் பிரதான தரிசனம். அத்துடன், ஊழியர்களைப் பயிற்சிக்கும் பணியினையும், திருச்சபைகளை ஸ்தாபிக்கும் பணிகளையும் தொடர்ந்து செய்துவருகின்றது. பீஹார், ஜார்க்கண்ட், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் மற்றும் மஹராஷ்டிரா மாநில மக்களுக்கு நற்செய்தியினை அறிவிப்பதுடன், அண்டை நாடுகளில் நடைபெறும் ஊழியங்களையும் ஊக்குவித்துவருகின்றது. ஆதிவாசி மக்களைச் சந்திப்பது, குழந்தைத் தொழிலாளர்கள், ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோரை மறுவாழ்வு மையங்களில் ஆதரிப்பது, மருத்துவ சேவை அளிப்பது, கல்வியினால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது போன்ற ஊழியங்களால் உன்னதரை உலகிற்கு அறிவித்துவரும் ஓர் மிஷனரி ஊழியம்.

அன்பின் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான ஜெபப் பங்காளரே,

தேவராஜ்யம் சீக்கிரம் வெளிப்படுமென்று நினைத்தவர்களைப் பார்த்து, உவமையாய் ஆனால் தீர்க்கமாய், தன் ஊழியக்காரரை அழைத்து பத்து ராத்தல் திரவியங் கொடுத்து, நான் திரும்பிவருமளவும் இதைக் கொண்டு வியாபாரம் பண்ணுங்கள் என்று சொன்ன எஜமானோடு தன்னை ஒப்பிட்டு, நம்மை **பெறுகிறவர்களாகவும், பொறுப்புள்ளவர்களாகவும்** மாற்றிவிட்ட அன்பர் இயேசுவின் நாமத்தில் இனிய வாழ்த்துக்கள். (லூக். 19:11-27)

வியாபார உலகத்தினைக் குறித்த தப்புக் கணக்குகளையே அநேகர் அறிந்துள்ளனர். வியாபார உலகின் உக்திகளை தங்களுக்குச் சாதகமாக மாற்றி காணிக்கை சேகரிப்போரும் உண்டு. ஆனால், வியாபார உலகினை **(Business world)** ஊழியமாகப் பார்க்கப் படித்து, தேவ இராஜ்யம் அதினால் கட்டப்படுவதனை உணர்ந்தவர் மிகவும் குறைவு **(Business as missions).**

இது உண்மைதான்; **வியாபாரிகள், மக்களின் ஆவிக்குரிய வாழ்வினைக் கெடுத்துப்போடமுடியும்.**

நெகேமியா, ஜனங்கள் ஓய்வு நாளில் கர்த்தரைத் தேடவேண்டும், தேவ வசனத்தின்படி ஆசரிக்கவேண்டும் என்று எஸ்றா என்கிற வேதபாரகனால் போதிக்கப்பட்டதின்படி ஒழுங்குகளைச் செய்திருந்தான். ஆனால், நெகேமியா தொடர்ச்சியான

விடுமுறையினை இராஜாவிடம் பெற்றுக்கொள்ளப் போன வேளையில், வியாபாரிகள் தானியப் பொதிகளைக் கழுதைகள் மேல் ஏற்றிக்கொண்டு, திராட்சைரசம், திராட்சைப்பழம், அத்திப்பழம் முதலானவைகளையும் ஓய்வுநாளிலே எருசலேமுக்குக் கொண்டுசென்று திண்பண்டங்களையும் விற்றதினால், மீனையும், சகலவித சரக்குகளையும் விற்பனை செய்ய மற்றவர்களும் ஏவப்பட்டு, ஓய்வுநாளைப் பரிசுத்த குலைச்சலாக்குகிறதற்கு வழி செய்தனர். அதனைக் கண்ட நெகேமியா அவர்களைக் **கடிந்துகொண்டதனையும், மீறினால் உங்கள்மேல் கைபோடுவேன் (அடிப்பேன்)** என்று சொன்னதையும் வேதம் நமக்குக் காட்டிக்கொடுக்கிறது. (நெகே. 13:14-21)

அநேக **வியாபாரிகள் தனக்கு எவ்வகையிலும் பணம் சேரவேண்டும் என்பதிலேயே குறியாய் இருப்பதினால்,** மற்றவர்களின் ஆவிக்குரிய வாழ்வினை அழித்துப்போட, **மக்களின் தேவைகளைக் காணப்பித்தே தங்கள் காரியங்களை முடித்துக்கொள்கிறார்கள்**. இதனை ஆவிக்குரிய ஊழிய வியாபாரிகளும் முறையாக செய்துவருவதினைக் காணலாம்.

இயேசு பூமியில் சரீரத்தில் இருந்த நாட்களில், ஆலயத்தினை வியாபார வீடாக்கினதினைக் கண்டபோது, வெகுண்டு எழுந்ததனையும், **சாந்த சொரூபியான அவர்** (மத். 11:29) தீயாய் எழுந்து நின்று அடித்து வெளியே அனுப்பினதையும் வேதம் நமக்குக் காட்டிக்கொடுக்கிறது (யோவா 2:13-17). அதனை அவரின் **பக்திவைராக்கியம்** என்றே வேதம் வர்ணிக்கிறது.

அவருடைய ஊழியத்தின் ஆரம்பத்தில் செய்த அவர் மீண்டும் 3 ஆண்டுகள் கழித்து அதே காட்சி அரங்கேற்றப்பட்டிருப்பதனைக் கண்டு பொங்கி எழுந்தார், அழுதார். கள்ளர் குகையாகிவிட்டக் கொடுமையை பொறுக்கக்கூடாதவராயினார் (லூக். 19:41-46). ஏனெனில், தான் புறப்படும் ஊரிலிருந்தே பலி செலுத்த வருபவன் ஆட்டையோ, மாட்டையோ பிடித்துக்கொண்டு தேவாலயம் சென்றால், பார்க்கின்ற ஜனங்கள், “இவன் பாவமன்னிப்பை நாடிச் செல்கிறான், மனஸ்தாபப்பட்டிருக்கிறான்” என்பதனை கண்டுகொள்ள வாய்ப்புண்டு.

ஆனால் **தங்களின் பணப்பையை நிரப்புவதே நோக்கமாகக் கொண்டிருந்த பிரதான ஆசாரியரும்** மற்றவரும் வியாபாரிகளிடத்தில் பணம் பெற்றுக்கொண்டு, ஆலயத்தினை வியாபார வீடாக்கி, பின்னர் அதனை கள்ளர்குகையாகவே மாற்றிவிட்டிருந்தனர்.

வியாபாரிகளை வைத்தே வியாபாரம் செய்யும் பெரிய வியாபாரிகள் ஆவிக்குரிய தலைவர்களாக இருக்கக் கண்ட இயேசு, இதனை வன்மையாக எதிர்க்கிறார், கண்டிக்கிறார், புறம்பே துரத்துகிறார்.

இந்த செய்கைகள்தான் இரட்சகருக்கே விலைபேச வைத்துவிட்டது அவர்களை. **வாழ்க்கையை எளிதாக்குவதுபோல காண்பித்து, தங்களின் வருமானத்தைப் பெருக்கவே இந்த நடவடிக்கை.** இன்னும் ஆலய வளாகங்களைச் சுற்றி அமைக்கப்பட்டிருக்கும் கடைகளைக் காணுங்கால், அதனைச் சுற்றி நடக்கும் அட்டகாசங்களைக் காணுங்கால், இயேசுவின் நாட்கள் உங்களுக்கு நினைவு வரலாம்.

ஆவிக்குரிய விழாக்களில் வெளியே ஸ்டால் போடுபவரைக் கவனித்துப் பார்த்தால் இது விளங்கும். எல்லாரும் அப்படியில்லையென்றாலும், அநேகருடைய நோக்கம் பணம் சம்பாதிப்பதே. இந்த கடைகள் கூட்டத்தில் தேவவசனம் பேசப்படும்போதும் தேவ ஆவியானவர் அசைவாடி ஜனங்களை சீர்திருத்தம் செய்துகொண்டிருக்கும்போதும் படுஜோராக செயல்படும்; ஏனெனில் நோக்கம் வேறே.

சுருங்கச் சொன்னால், **வியாபாரிகள் ஆவிக்குரிய வாழ்வினை அவித்துப்போட சத்துருவாய் உபயோகப்படக்கூடிய ஒரு கருவியாக செயல்பட வாய்ப்புகள் அதிகம்.**

ஆனால் .... வியாபாரம் **(Business world)** வாழ்க்கையின் ஒரு பகுதியல்லவா? கள்ளத் தராசு கூடாது, வெவ்வேறான படிக்கற்கள் கூடாது என்பதனை வேதம் கட்டளையாகவே சொல்கிறதின் ரகசியம், நேர்மையான வியாபாரம் செய் என்பதுதான். (நீதி. 20:10,23)

ஐயோ! அது முடியவே முடியாது என்று கூறி ஒதுங்கி நிற்பவர் ஏராளம். **'Infosys"** நிறுவனர் திரு. **"நாராயணமூர்த்தி"** நான் உத்தமத்தைத்தான் **(Integrity)** மூலதனமாகக் கொண்டுள்ளேன் என்று ஒரு பேட்டியில் கூறியிருந்தார். (அதனை

எப்படிகாத்துக்கொண்டார் இந்த **பிணந்தின்னி கழுகுகள் நிறைந்த, அரசியல் மற்றும் தொழில் உலகில்** என்பது தெரியாது). ஆனால், வேதம் அது கூடும் என்றே அழுத்தமாகக் கூறுகிறது.

நான் **'Good business with the good book"** என்ற தலைப்பில் துபாயில் பிசினஸ் மக்கள் மத்தியில் பேசினபோது, அவர்களுக்குள் அது ஒரு சவால் நிறைந்த வாழ்வுக்கு வழிவகுத்தது.

வியாபாரிகளால்தான் லஞ்சம் பெருகிவிட்டது. தங்களுடையதை சாதிக்க அவர்கள் நாடும் குறுக்கு வழிகளே அதிகாரிகளை, அரசியல்வாதிகளை ஏன் சாதாரண குமாஸ்தாவையும், **TTR** ஐயும் லஞ்சம் வாங்கச் செய்தது **என்று வாதிடுவோரும் உண்டு.**

வியாபாரத்தில் போட்டி என்பது தவிர்க்க முடியாதது. ஆனால், தரமான பொருட்களை தகுதியான விலையில் சரியான லாபத்தோடு விற்று, ஜனங்களையும் நேசித்து, உறவையும் உடைக்காமல், கலப்படம் செய்யாமல், ஒழுங்கான வரிகளைக் கட்டி, அரசாங்க விதிமுறைகளைக் கைக்கொண்டு, லாபத்தினையும், பெருக்கத்தையும் மாத்திரம் கருத்தில் கொள்ளாமல் வியாபாரம் செய்ய முடியும் என்பதனை இந்த உலகத்திற்கு உணர்த்துவிக்க உத்தம விசுவாச வியாபாரிகள் தேவை.

நியாயத்தைப் புரட்டி, மற்றவர்களுக்கு வரவேண்டிய வாய்ப்பினை தனதாக்கிக்கொள்ள லஞ்சம் தந்து செயல்பட்டால் அது அநீதிதானே.

மார்வாடி இனத்தவர்கள் வியாபாரத்தில் சிறந்தவர்கள் என கருதப்படுபவர்கள். அவர்கள் **இணைந்து ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல், தங்களுக்குள் நல்ல பிணைப்பினை வைத்துக்கொண்டு** செயல்படுவதால் அது சாத்தியமாகிறது.

சில இடங்களில் இவர்கள் பொருளின் விலையை அதிகரிக்க எண்ணி, மலிவாக இருக்கும்போது பெருமளவில் அதனை கொள்முதல் செய்து, மறைத்து வைத்து, பொருளின் தேவைக்கு மக்கள் அலைந்து திரியும்போது, அதிக விலையில் அதனை விநியோகம் செய்து (பதுக்கல் முறை) பொருளை ஈட்டினர் என்பது உண்மை. **(Increase the demand by remand the product)** என்ற சித்தாந்தம் வேதம் சொல்லும் முறை அல்ல. “தானியத்தைக் கட்டிவைக்கிறவனை ஜனங்கள் சபிப்பார்கள்; விற்கிறவனுடைய தலையின் மேல் ஆசீர்வாதம் தங்கும். (நீதி. 11:26)

பெரிய அளவில் தொழில் செய்ய நினைப்பவர்கள் அரசியல் தலைவர்களை தங்கள் வலைக்குள் மாட்டவைக்கவும், தங்களுக்குச் சாதகமான சட்டங்களை (policy) ஏற்றவும் செய்யும் வண்ணம், தேசத்தின் போக்கையே மாற்ற கோடி கோடிகளைக் கொடுத்து அவர்களை விலைக்குக் கொள்கிறார்கள்.

“இலவசம்” **(free)** என்பது அனைவருக்கும் ஒரு **''ஈர்ப்பு'' (attraction)** சொல். இதனை உபயோகப்படுத்தி ஏமாற்றப்படுவோர் எண்ணிக்கை மிகவும் அதிகம். இந்த கலையை **'Reliance"** போன்ற இந்தியாவின் பெரும் பணக்காரர்களே உபயோகிப்பது இதனுடைய வல்லமையை விளங்கப்பண்ணப் போதுமானது. உபாயத்தந்திரங்களை அறிந்தவர்களும் மாட்டிக்கொள்கின்றனர்.

கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் வியாபாரிகளை வெறும் காணிக்கை அதிகமாகத் தருபவர்களாகத்தான் பார்க்கிறார்களே தவிர, கர்த்தருடைய ராஜ்யத்தினைக் கட்டுவதில் அவர்களுடைய பங்குகளைப் பார்ப்பதில்லை; அல்லது அவர்களை உந்தித்தள்ளுவதில்லை. வியாபாரிகளின் பணம் மாத்திரம் அல்ல, அவர்களுக்குள் **தேவன் வைத்திருக்கிற அனைத்து திறமைகளும்** ஆண்டவருக்கு உபயோகப்படும் வண்ணம் அவர்களை இயக்குவிப்பது சபைகளின், சங்கங்களின் கடமையாகும்.

அநேக ''பிசினஸ்'' மக்கள் திறமை மிகுந்தவர்கள். முன்னே பார்க்கக்கூடியவர்கள் (fore sighted men). **ஆராய்ந்து அறியக் கூடியவர்கள்** (in sight), **நிர்வாகத் திறமை மிகுந்தவர்கள்** (Administration skills), **திட்டமிடக்கூடியவர்கள்** (Planning), **நன்றாக பட்ஜெட் இட்டு செயல்படக்கூடியவர்கள், (நேரத்தை, பணத்தை, மனித வளத்தை, சாதனங்களை) சிக்கனமாக, சிதறாமல், வீணடிக்காமல் செயல்படும் திறமை பெற்றவர்கள். வருங்கால ஆபத்துக்களை அறியக்கூடியவர்கள், உறவை தக்கவைக்க அறிந்தவர்கள்** (Relationship), **புதிய உறவை வளர்க்க புரிந்தவர்கள், புதிய காரியத்தினைச் செய்ய வாஞ்சிப்பவர்கள்** (New initiative), **அயராது உழைக்க அறிந்தவர்கள், இலக்கு வைத்து செயல்படுபவர்கள்** (goal setting), **சொப்பனம் காண்பவர்கள்** (Good dreamers), **நல்நோக்கினை வளர்க்கத் தெரிந்தவர்கள்** (Good Ambitions), **பொறுப்புகளைப் பகிர்ந்து அளிக்கக்கூடிவர்கள்** (delegating job), **மற்றவர்களை நம்புபவர்கள்** (Trusting others), **அநேகரது நம்பிக்கைக்குரியவர்கள்** (Trust worth), **நேரத்தின் வலிமையைப் புரிந்தவர்கள்** (Time management), **சரியானவைகளுக்கு**

முன்னுரிமை கொடுக்க அறிந்தவர்கள் (Setting priorities), **நெஞ்சில் ஈரம் உள்ளவர்கள்** (Soft natured), **ஜாக்கிரதை மிகுந்தவர்கள்** (Vigilant).

ஆனால், இவர்களுடைய இந்தக் காரியங்களை தேவ சபைகள் காணவோ, விருத்தியாக்கவோ (Developing), **உபயோகிக்கவோ தவறிவிட்டது** என்று நான் தைரியமாகச் சொல்லுவேன். சபைகளும், ஸ்தாபனங்களும் அவர்களிடம் வெறும் பணத்தைப் பெறுவதனை மாத்திரம் குறியாய் கொண்டுவிட்டன; என்னே பரிதாபம்.

“குணசாலியான ஸ்திரீ” என்ற பெண்ணைக் குறித்து பேசும் வேதம், அவளை **"வியாபாரக் கப்பலுக்கே"** ஒப்பிடுகிறது. அவளுடைய குணங்களைப் பட்டியலிடுகிறது. (நீதி. 31:13-22)

1. உற்சாகத்தோடே வேலை செய்கிறாள் (சுறுசுறுப்பானவள் - **Active**)
2. தூரத்திலிருந்து தன் ஆகாரத்தைக் கொண்டுவருகிறாள் (**Long sighted life** - தூரப் பார்வை)
3. தன் வேலைக்காரருக்கு படியளக்கிறாள் (ஜனங்கள் மேல் கரிசனை - **caring and having a soft heart**)
4. ஒரு வயலை, திராட்சைத் தோட்டத்தை நிலைநிறுத்துகிறாள். (புதியவைகள் - **New initiatives**)
5. கடுமையான உழைப்பாளி **(Hard working)**

சபையை ஆண்டவர் மணவாட்டி என்று அழைப்பது உண்மையானால், இந்த வசனங்கள் சபைக்கு பொருந்தும் அல்லவா! சபை இப்படி செயல்பட முடியுமானால் **Business as Missions** எளிதானதே.

ஆவிக்குரிய வாழ்வு - ஆதாய வாழ்வு என்று **(Spiritual and Secular)** பிரிக்காமல், நான் எப்போதும், எல்லா இடங்களிலேயும், கிறிஸ்துவின் ஸ்தானாதிபதி என்ற நினைவு, எங்கிருந்தாலும் நான் தேவனுடைய பிள்ளை எந்நிலையிலும் நான் தேவ இராஜ்யத்தின் பிரஜை என்ற எண்ணங்கள் மேலோங்கினால் இது சாத்தியமே.

சமீபத்தில் நான் செய்துவரும் **MPTC (Missionary preparatory Training Course)** வகுப்புகளில் இதனை பாடமாக்கிக் கற்றுத்

தந்தோம். நீங்கள் அறிந்தபடி தற்போது **MPTC** பல நாடுகளிலும் இந்தியாவின் பல நகரங்களிலும் நடத்தப்படுகிறது. இதில் பயிற்சி பெற்ற சகோ. Joshua என்ற படித்த வாலிபர், ஒரு தொழிலை ஆரம்பித்தார். அதில் வங்காளத்தைச் சேர்ந்த **18 இஸ்லாமியர்கள், மத்தியபிரதேசத்தினைச் சேர்ந்த 10 பேர், ஆந்திராவைச் சேர்ந்த 6 பேர் கூடவே சில தமிழ் மக்களைக் கொண்ட** கம்பெனியை ஆரம்பித்து, ஒவ்வொரு புதன் கிழமையும் 3 மாதகாலத்தில் முறையாக இயேசுவின் சுவிசேஷத்தை அவர்களுக்கு கற்றுத் தந்ததாலும், ஒரு ஓய்வு பெற்ற ஆனால் ஹிந்தி தெரிந்த மிஷனரியை உபயோகித்து அவர்களுக்கு கூட்டங்களை நடத்தியதாலும், பொழுதுபோக்கு அம்சங்களோடு நிறைந்த ஒழுக்கக் கூட்டங்களில் (Retreat) அவர்களை ஈடுபடுத்தினதினால், இன்று அவர்கள் அனைவரும் கிறிஸ்துவுக்கு நற்சாட்சிகள். தங்கள் மக்களுக்கு கிறிஸ்துவை தரும் சுவிசேஷகர்கள்.

கூடவே, அவர்கள் மற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கத்தக்க **DVD**க்கள் புத்தகங்கள் இலவசமாக கொடுக்கப்பட்டதினால், இவர்கள் **தீவிர ஆத்தும ஆதாயகர்கள்**; எத்தனை ஆச்சரியம்!!!

தேவ இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட அனைவரும் இணைந்தால் மாத்திரம் போதாது, செயல்பட்டு தங்களால் இயன்றதை இருந்த இடத்திலேயும் செய்யவேண்டும்; அப்போது, **இடிந்த மதில்கள் - 90 வருடங்கள் கவனிப்பாரற்று கிடந்தவைகள் - 52 நாளில் கட்டப்பட்டுவிடுமே**.

மேல்படிப்புகளுக்காக பிள்ளைகளை சேர்ப்பதில் அநேகர் தீவிர முயற்சியில் ஈடுபடும் மாதங்கள் இவை, கவனமாக செயல்படுங்கள்.

1. உங்கள் **விருப்பங்களை** / கனவுகளை பிள்ளைகளுக்குள் திணிக்காதீர்கள்.
2. எத்தனை பணம் கொடுத்தும் சீட் வாங்கிவிட **முயற்சிக்காதீர்கள்**.
3. பிள்ளையையும் **கலந்தாலோசியுங்கள்**.
4. உங்கள் பலத்திற்கு மிஞ்சி (அரசு உதவி பெற்று உயர் கல்வி சேரலாம்) **கடன் வாங்கியாகிலும் படிக்கவைப்பேன் என்று கங்கணம் கட்டாதீர்கள்**.
5. **தேவனை நோக்கிப் பார்க்கத் தவறாதீர்கள்**. தேவ ஊழியர்

ஜெபித்தால் அற்புதம் நடந்துவிடும் என்ற மாயையை பின்பற்றாதீர்கள்.

6. கிடைக்காத கல்லூரி சீட்டையோ மார்க்குகளையோ எண்ணி எண்ணி மனம் **சோர்ந்துபோகாதீர்கள்**.

7. தயவு அடைவதற்கு வித்துவான்களின் அறிவும் போதாது. அவர்கள் எல்லாருக்கும் **சமயமும் (Timing) தேவ செயலும் (Favour)** நேரிடவேண்டுமே. (பிர. 9:11)

வியாபாரக் கப்பல் நீ தேவசபையே
விளங்காமல் வாழ்வாயோ காலமும்
வித்தகர்களும் புத்திமான்களும் உண்டே
வியர்த்தமாக்க விட்டுவிடாதே நீயும்

திறமை மிக்கோர், திரவியம் ஈட்டத் தெரிந்தோர்
புதுமை படைப்பார், புவியையும் புரட்டுவார்
கடமைதனைச் செய்து முடிக்கும்வரை கண் உறங்கார்
பொறுமையுடன் பணி செய்து பொறுப்பாய் செயல்படுவார்

வெறும் பணம் பொழியும் எந்திரமல்ல
வெற்றுப் பேச்சு பேசும் சொற்பொழிவாளருமல்ல
கற்றுத் தேர்ந்ததனை காற்றில் விடுபவருமல்ல
சுற்றி நிற்போரை ஏமாற்றிப் பிழைப்பவருமல்ல

தொழில் செய்பவரை அடையாளம் கண்டுகொள் நீயும்
தொலைநோக்குப் பார்வையுடன் செயல்படத் துணிவாய் தினமும்
கவலைகொள், வியாபாரிகளையும் உபயோகிப்பாய் அவருக்காய்
தொல்லையையும், சூழ்நிலையையும் இவரால் மாற்றிடுவாய் சபையே நீயும்.

அறுவடைப் பணியில்
அன்பு சகோதரன் D. அகஸ்டின் ஜெபக்குமார்

அழுத்தும் பாரமே அழைப்பு

இந்த வார்த்தைகளைக் கேட்டபோது நான் உட்கார்ந்து அழுது, சில நாளாய்த் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி... (நெகே 1:4)

நெகேமியாவின் உள்ளத்தில் இந்த பாரம் திடீரென்று வந்துவிடவில்லை; அது தொடர்ச்சியாக அவனுடைய உள்ளத்தில் இருந்துகொண்டிருந்தது. ஒரு காரியத்தைக் குறித்த பாரத்தை தேவன் கொடுக்கும்போது, அது சற்று நேரத்திற்கென நமது உள்ளத்தில் தோன்றி மறைவதாக இருக்காது; மாறாக தொடர்ந்து உள்ளத்தில் உறைந்துவிடுவதாக இருக்கும். குஷ்டரோகிகளைப் பார்க்கும்போது, அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்ற பாரம் வருகிறது; சற்று தூரம் சென்றதும், பிச்சை எடுத்துக்கொண்டிருக்கும் பிள்ளைகளைப் கண்டதும், அவர்களைக் காப்பாற்றவேண்டும் என்ற பாரம் உண்டாகின்றது; இன்றும் சற்று தூரம் சென்றதும், குறும்புக்கார பிள்ளைகைளைச் சந்திக்கவேண்டும் என்ற விருப்பம் உண்டாகிறது; இன்னும் சற்று தூரம் சென்றதும், கேலி செய்யும் ஜனங்கள் மத்தியில் ஊழியம் செய்யவேண்டும் என்ற விருப்பம் உதிக்கிறது; பின்னர், உணவு விடுதிக்குச் செல்லும்போது, அங்கு பணி செய்யும் சிறுவர்களை விடுவிக்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாகிறது; இவை அத்தனையினையும் எண்ணத்தில் ஏற்றிக்கொண்ட நீங்கள் எந்த ஊழியத்தைச் செய்வீர்கள்? கண் கண்டதையெல்லாம் இது என்னுடைய ஊழியம் என்று செய்யத் தொடங்குவீர்களென்றால், அது உங்களுக்கென தேவன் குறித்த ஊழியமாக இராது. இந்த உலகத்தின் தேவை மிகப் பெரியது. எனினும், எந்த ஒரு காரியம் உங்களை மீண்டும் மீண்டும் பாரப்படுத்துகின்றதோ, எந்த ஒரு காரியத்தினால் திரும்பத் திரும்ப நீங்கள் தொந்தரவாக்கப்படுகின்றீர்களோ, எந்த காரியத்தை நினைத்து நினைத்து தூங்க முடியாமல் இருக்கின்றீர்களோ, அதுவே கர்த்தர் உங்களுக்கென குறித்த காரியம்.

எருசலேமின் அலங்கம் இடிபட்டுக் கிடந்த செய்தியைக் கேள்விப்பட்ட நெகேமியா அநேக நாட்களாக அழுதுகொண்டேயிருந்தான், துக்கித்துக்கொண்டேயிருந்தான், யோசித்துக்கொண்டேயிருந்தான்; தேவனே எருசலேமின் அலங்கத்தைக் கட்ட நான் என்ன செய்ய முடியும் என்று அவன் நினைத்திருப்பான். பெரிய வேலையில் அமர்த்தப்பட்டிருக்கும் நான், சில பண வசதிகளைச் செய்துகொடுக்க முடியும்; ஆனால், அது அலங்கத்தைக் கட்டப் போதாது; இன்னும் பணம் வேண்டும்; இங்கிருந்து புறப்பட்டுச் செல்லவேண்டுமென்றால், விடுப்பு வேண்டும்; மற்றவர்களுடைய

உதவியும் ஒத்தாசையும் வேண்டும்; இதெல்லாம் சாத்தியமா என்று அவன் யோசித்திருப்பான்; எனினும், அவன் தொடர்ந்து ஜெபிக்கிறான், உபவாசிக்கிறான்.

ஊழியத்தில் அநேகர் தோல்வியடையக் காரணம், மற்றவர்கள் செய்யும் ஊழியங்களைக் கண்டு, அவைகளையே தாங்களும் செய்ய விரும்புவதே. தொலைக்காட்சியில் பிரசங்கம் செய்துகொண்டிருக்கும் ஊழியரைக் காணும்போது, தானும் தொலைக்காட்சியில் பிரசங்கம் செய்ய முடியாதா? என்றும், அனாதை இல்லம் நடத்தும் ஊழியர்களைக் காணும்போது, தானும் அவரைப் போன்று அனாதை இல்லம் நடத்த முடியாதா? என்றும் போலியோ இல்லம் நடத்துவோரைக் கண்டு தானும் போலியோ இல்லம் நடத்த முடியாதா? என்றும் பள்ளிகளை நடத்துவோரைக் கண்டு தானும் பள்ளிகளை நடத்த முடியாதா? என்றும் தாங்கள் காண்பவைகளையெல்லாம் செய்துவிட முற்படுகிறதினாலேயே, சிலருடைய ஊழியங்கள் அப்படியே நின்றுபோய்விட்டன. மற்றவர்களைப் பார்த்து நாம் உந்தப்படுவது தவறல்லவே, என்றாலும், எந்த காரியம் நம்மை மீண்டும் மீண்டும் பாரப்படுத்துகின்றதோ அதுவே தேவன் நமக்குக் கொடுத்த ஊழியம். எனவே, தேவன் நமக்கென்று கொடுத்த ஊழியத்தை நாம் முதலில் அறிந்துகொள்ளவேண்டும்.

எருசலேமின் பாதுகாப்பற்ற நிலையினைக் கேள்விப்பட்ட நெகேமியா அநேக நாட்கள் உட்கார்ந்து அழுகிறான்; ஆண்டவரே, நீர் இந்த காரியத்திற்கு வழி திறந்தால், இருக்கிற இந்த வசதிகளையெல்லாம் தான் விட்டுவிட்டுப் போக அவன் ஆயத்தமாயிருந்தான்; 'ஆண்டவரே, நீர் எனக்கு உதவி செய்வீரென்றால், நான் எதையும் செய்ய ஆயத்தமாக இருக்கிறேன்; நீர் ராஜாவோடு பேசவேண்டும், ராஜா எனக்கு உதவி செய்யவேண்டும், ராஜா எனக்கு விடுப்பு தரவேண்டும், புறப்பட்டுப் போகும்போது எனக்கு பாதுகாப்பாக ஆட்களை கூட அனுப்பித்தரவேண்டும். இந்த எல்லா காரியங்களையும் ஆண்டவரே நீர் மாத்திரமே செய்ய முடியும்' என்று உருக்கமாக ஜெபிக்கிறான். அவனுடைய ஜெபம் நீளமாக பட்டியலிடப்பட்டிருக்கின்றது; அந்த ஜெபம் நாம் தியானிக்கவேண்டியது.

வேதாகமத்தில் அநேகருடைய ஜெபங்கள் எழுதப்பட்டிருக்கின்றன; கெத்செமனே தோட்டத்தில் இயேசு கிறிஸ்து செய்த ஜெபம், எஸ்றாவின் ஜெபம், நெகேமியாவின் ஜெபம், தாவீதின் ஜெபம் மற்றும் தானியேலின் ஜெபம். இவர்களுடைய ஜெபங்களை நாம் தியானிக்கும்போது, அவைகள் நமக்கு பெரிய உற்சாகத்தையும், உத்வேகத்தையும் கொடுக்கின்றன. தேவனை நோக்கி ஜெபிக்கவேண்டிய முறைகளைக் கற்றுக்கொள்ளவே இவைகள் நமக்காக வேதத்தில் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன.

உபவாசக் கூடுகை

மார்ச் 27, 28, 29 ஆகிய மூன்று தினங்கள் சிக்காரியாவிலுள்ள ஜெம்ஸ் ஆடிட்டோரியத்தில் உபவாசக் கூடுகை நடைபெற்றது. பணித்தள விசுவாசிகள் மற்றும் ஊழியர்கள் இக்கூடுகையில் பங்கேற்றனர். முன்னுரையாக, "நமது ஜெபங்களுக்கு பதில் தாமதிப்பது (மத். 15:21-28) விசுவாசத்தின் நிலைக்கு நம்மை உயர்த்தவே" என்றும். அத்துடன் தேவனைத் தேடுவதில் இருக்கவேண்டிய தாழ்மையையும் குறித்து பகிர்ந்துகொண்டார் சகோ. அகஸ்டின் ஜெபக்குமார். பாடல்கள் மற்றும் ஆராதனையினைத் தொடர்ந்து, "ஆசீர்வாதமான பாத்திரமாக யாக்கோபை தேவன் உயர்த்தினார்" என்ற சத்தியத்தை செய்தியாகப் பகிர்ந்துகொண்டார் சிறப்பு விருந்தினர் சகோ. ஜோதி சுந்தர்சிங் (திருச்சி). நிர்வாக இயக்குநர் Dr. அசோக்குமார் மற்றும் ஜெம்ஸ் ஊழியத்தின் மூத்த தலைவர்கள் பலர், நாம் வாழும் தேசத்திற்காகவும், உலகின் பல்வேறு நாடுகளுக்காகவும் ஜனங்களை ஜெபத்தில் வழிநடத்தினர். தொடர்ந்து நடைபெற்ற இரண்டு நாள் காலை கூடுகையில், சகோ. அகஸ்டின் ஜெபக்குமார் கர்த்தருடைய செய்தியைப் பகிர்ந்துகொண்டார். தாவீதின் வாழ்க்கையைக் குறித்தும், அவன் தனது பழைய அனுபவத்தை அல்ல தேவனையே சார்ந்திருந்தான் என்பதை வலியுறுத்தியும், கர்த்தருடைய சமூகமே அவன் அபிஷே கத்தில் நிறைந்து சத்துருவை எதிர்க்க போதுமானதாயிருந்தது என்றும் சகோதரர் அளித்த செய்தி ஜனங்களுக்கு ஆசீர்வாதமாயிருந்தது.

சகோ. பெல்ஷாத், சகோ. பிரபாகரன் மற்றும் சகோ. அர்ஜுன் கர்மாலி ஆகியோர் பாடற்குழுவினருடன் இணைந்து ஜனங்களை ஆராதனையில் வழிநடத்தினர். பகற்கூட்டங்களில் சிறப்பு விருந்தினர் சகோ. சுந்தர்சிங் மற்றும் ஜெர்மனியைச் சேர்ந்த சகோ. வால்டிமர் ஆகியோர் கர்த்தருடைய செய்தியைப் பகிர்ந்துகொண்டனர். சிக்காரியா மற்றும் தர்பங்காவைச் சேர்ந்த ஜெம்ஸ் தீமோத்தேயு வேதாகமக் கல்லூரி மாணவர்களுக்காக தலைவர்கள் ஜெபித்ததுடன், ஜெம்ஸ் தையற்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற சகோதரிகளுக்காகவும் ஜெபித்து அவர்களது வாழ்க்கைக்கு ஆதாரமான தையல் எந்திரமும் இலவசமாக வழங்கப்பட்டது.

HIS PRESENCE

पराक्रम

உபவாசக் கூடுகை

पराक्रम

EEK HIS

மகராஷ்டிரா

விடுமுறை

வேதாகமப்

பள்ளி

நிம்மியாடி

விடுமுறை வேதாகமக் கல்வி
இயக்குநர் பயிற்சி

வாலிபர் ஒருநாள் கூடுகை ~ கடுவா

வாலிபர்களை கிறிஸ்துவுக்குள் பெலப்படுத்தும் நோக்கத்துடன், ஜார்க்கண்ட் மாநிலம், கடுவா பணித்தள ஆலயத்தில் வாலிபர்களுக்கான ஒருநாள் சிறப்புக் கூடுகையினை நடத்தினோம். டால்டன்கஞ்ச், ஜப்லா, கஞ்சிஹறா, சத்தர்பூர், மொகமத்கஞ்ச், மஜியான், டாஸ்ரார், டேவ்கானா, ராஜ்கரா, துர்ஹி ஆகிய பணித்தளங்களைச் சேர்ந்த 110 வாலிப சகோதர சகோதரிகள் இக்கூடுகையில் பங்கேற்றனர். பாடல் வேளை மற்றும் ஆராதனை வேளையினைத் தொடர்ந்து சகோ. கிறிஸ்டோபர் வாலிபர்களின் வாழ்க்கைக்கு வலுசேர்க்கும் செய்தியைப் பகிர்ந்துகொண்டார். சகோ. ஆசீஷ் நடைமுறை வாழ்க்கையில் கர்த்தருடைய பிள்ளைகள் அன்றாடம் கைக்கொள்ளவேண்டிய ஆலோசனைகளை வாலிபர்களுக்கு வழங்கினார். வாலிபர்கள் தங்கள் வாழ்க்கையை வேதத்தின் அடிப்படையில் ஆராய்ந்து அறியவும், தாங்கள் அவரது கரத்தின் பாத்திரங்கள் என்பதை உணர்ந்துகொள்ளவும், ஆண்டவர் சமுகத்து ஆனந்தத்தை அனுபவிக்கவும், வேத வசனத்தின்படி தங்கள் வாழ்க்கையின் வழிகளை சீர்படுத்திக்கொள்ளவும் இந்த ஒரு நாள் கூடுகை அவர்களுக்கு உதவியாயிருந்தது.

விடுமுறை வேதாகமக் கல்வி

பணித்தளங்களில் நடைபெற்றுவரும் விடுமுறை வேதாகமப் பள்ளி ஊழியங்களின் மூலமாக சிறுவர்களும் இளைஞர்களும் சந்திக்கப்பட்டனர். நிம்மியாடி பணித்தளத்தில் மே 8 முதல் 13 வரையிலான நாட்கள் நடைபெற்ற விடுமுறை வேதாகமப் பள்ளி வகுப்புகளில், பணித்தளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த 1200 சிறுவர் சிறுமியர்கள் மற்றும் இளைஞர்கள் பங்கேற்றனர். கிறிஸ்துவின் அன்புடன் வேத வசனங்களும் இவர்களின் இதயங்களில் விதைக்கப்பட்டது. ஜெபவேளையில் சிறுவர்கள் பலர் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, ஆண்டவருக்கென்று தங்கள் வாழ்க்கையினை ஒப்புக்கொடுத்தனர். இவர்கள் மூலமாக குடும்பத்தினரும் ஆண்டவரின் அன்பினை அறிந்துகொள்ள ஜெபிப்போம்.

பணித்தளச் செய்திகள்

PEACE I கோட்டம்

ஜுன் 01 **பாராச்சட்டி**

சிங்கன்ஜ், தனிபான், முசைனா, புமுவார், பக்மரி, நாரே, பைனாத்பூர், பட்பீஹா, கைராகாத், ஜனக்பூர் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டு ஆர்வம் உள்ளவர்களுக்கு புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டன. புதிய தொடர்பில் இருந்தவர்களில் கான்கோசிங், தபேஷ்வர்சிங், சுனிதாதேவி, லலிதாதேவி ஆகியோர் புதிதாக ஆராதனையில் பங்குகொள்கிறார்கள். சபையில் புது விசுவாசிகள் 15 பேர் திருவசனத்திற்குக் கீழ்ப்படிந்து திருமுழுக்குப் பெற்றார்கள். பக்மரி என்ற கிராமத்தில் படக்காட்சி ஊழியத்தின் வாயிலாக 120 பேருக்கு சுவிசேஷம் கடந்து சென்றதற்காக துதியுங்கள். இப்பணித்தளத்தில் ஊழியத்திற்கு விரோதமாக எழும்பியவர்களை தேவன் சந்திக்கும்படியாகவும், இப்பணித்தள ஊழியருடைய பாதுகாப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஜுன் 02 **சத்ரா**

அமௌனா, சிக்வாயி, சேரேகாடா, சேரேத், தக்பாடர், கா.:.ப், கசியாடிஹ், டும்ரி ஆஹ்ரா ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. தனிநபர் ஊழியத்தின் வாயிலாக ராஜேஷ் பாரதி, ராவ்ந்திதேவி, அமர் ஹாரா, ராஜு பாரதி, கீதாதேவி ஆகியோர் புதிய தொடர்பில் உள்ளனர். 6 மாதங்களாக பெலவீனமாக இருந்த முகேஷ் ஜெபத்தின் வாயிலாக சுகம் பெற்றமைக்காகவும், 7 பேர் ஞானஸ்நானம் பெற்றமைக்காகவும் துதியுங்கள். போலீஸ் லயின் கிராம மக்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்க

புதிதாக வழி திறக்கவும், குழந்தைப் பாக்கியம் இல்லாமலிருக்கும் ராவந்தியின் கர்ப்பம் ஆசீர்வதிக்கப்படவும், இப்பணித்தள ஊழியருடைய சரீர சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜுன் 03 கரு

நவாடோலி, மேர்லே, ஹுர்தத், பர்வாடோலி, சதாபே ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. தனிநபர் ஊழியத்தின் வாயிலாக ஆஷா, கலாவதி, தனோ, மனோஜ், ஆர்த்தி, ராகூல், குஷ்பூ, முன்டு, விஷ்மா, சுனிதா ஆகியோர் தொடர் ஊழியத்தினால் தொடப்பட்டு புதிதாக ஆராதனையில் கலந்து கொள்கிறதற்காகவும், சரீரத்தில் வலி, எரிச்சலினால் பாதிக்கப்பட்டிருந்த கலாதேவிக்கு ஜெபத்தின் வாயிலாக சுகம் கிடைத்ததற்காகவும் துதியுங்கள். சபை விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், இப்பணித்தள ஊழியருடைய பிள்ளைகளின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஜுன் 04 சீர்க்கி

பேலோடி, புனாடிஹ், ஸ்ரீசக், மமாரக்பூர், ஜெய்பூர், அபினாபாத், மோல்வி பீஹா ஆகிய இடங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. தனிநபர் ஊழியத்தின் வாயிலாக விசுமாஜி, உமேஷ் மண்டல், விஜய் தாஸ் ஆகியோர் புதிய தொடர்பில் உள்ளனர். குழந்தைப் பாக்கியம் இல்லாமலிருந்த நீலம்தேவிக்கு ஜெபத்தின் வாயிலாக தேவன் கர்ப்பத்தை ஆசீர்வதித்து ஆண் குழந்தையைக் கொடுத்ததற்காக துதியுங்கள். பேலௌடி கிராமத்தில் ஊழியத்திற்கு விரோதமாக செயலப்பட்டுவரும் அசோக் ராய் என்பவரை தேவன் சந்திக்கும்படியாகவும், முன்னிதேவி என்ற சகோதரிக்கு பிசாசின் போராட்டத்திலிருந்து விடுதலை கிடைக்கவும், இப்பணித்தள ஊழியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜுன் 05 டோபி

பீஜா, பிபர்கடி, வகில் கன்ஜ், நிக்ரி, வாயிபாஸ், திர்சின்டி, பன்குருவா, நவாடிஹ், பக்சோதி, முகேஷ்வர்பூர், போக்ராபர், சிபோகர், தோடாதாட் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. "இயேசு நம் மத்தியில்" என்ற சுவிசேஷப் புத்தகத்தின் வாயிலாக 100 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. சரீரம் முழுவதும் வேதனையோடிருந்த கௌசல்யா சபை உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்தபோது

பூரண சுகம் கிடைத்ததற்காக துதியுங்கள். இப்பணித்தள சபையின் எழுப்புதலுக்காகவும், விசுவாசிகள் விசுவாசத்தில் நிலைத்திருக்கவும் ஜெபியுங்கள்.

ஜூன் 06 சந்துவா

சந்துவா என்ற பகுதியில் படக்காட்சியின் வாயிலாக 120 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. கம்தா, பேல்வாஹி, ஹேசரி, பத்ராடோலி, மூசாட், பிரசாஹி ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. பேல்வாஹி என்ற பகுதியில் இஸ்லாமிய குடும்பங்களில் உருது மொழியில் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் கடந்து சென்றதற்காக துதியுங்கள். ஹாட்காட்வா பகுதியில் ஊழிய தடைகள் மாறவும், மஹலி டோலாவில் விசுவாசிகளுக்கு விரோதமாக செயல்படுபவர்களை தேவன் சந்திக்கவும், இப்பணித்தளங்களில் நடைபெற்று வரும் ஊழியங்களின் வளர்ச்சிக்காகவும் ஜெபியுங்கள்.

ஜூன் 07 கார்வா

சன்பூர்வா, தஷ்ரார், சேத்னா, டலிலி, பப்ஹன்தி ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக 150 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. தனிநபர் ஊழியத்தின் வாயிலாக சன்ஜய் ராம், மீனா பாடா, தீபிகா பாடக், கிரேசி மேரி டோபோ, கேலாரஸ், கமலேஷ் ராம், சுனிதா மசி, சந்தோஷ் ஆகியோர் புதிய தொடர்பில் உள்ளனர். போதைப் பழக்கத்திற்கு அடிமையாய் இருந்த கோபால் பிரசாத் ஜெபத்தின் வாயிலாகப் பெற்ற விடுதலைக்காக துதியுங்கள். சிகேந்தர் திருமணத் தடைகள் மாறவும், சபை விசுவாசிகளுக்காகவும், இப்பணித்தள ஊழியருடைய சகோதரரின் சரீர ஆரோக்கியத்திற்காகவும் ஜெபியுங்கள்

ஜூன் 08 பாலுமத்

டோக்யா, பைஷ்ரா, பர்சியா, பால்ஹி, சிதர்பூர், உரிடியாடாக், பட்வா, சுரோகி டோலி ஆகிய இடங்களில் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டியவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. தனிநபர் ஊழியத்தின் வாயிலாக ஜெய்நாத் உராவ், முன்னி தேவி, அமன் உராவ், ஆனந்த் உராவ், சன்தியா குமார், சன்ஜீத் குமார் ஆகியோர் ஆராதனையில் கலந்து கொள்வதற்காகவும், அசுத்த ஆவியின் போராட்டத்திலிருந்து

ஜெபத்தின் வாயிலாக ரீட்டா தேவிக்குக் கிடைத்த விடுதலைக்காகவும் துதியுங்கள். இப்பணித்தளத்தில் சபை கட்டுவதற்கான நிலம் கிடைக்கவும், இப்பணித்தள ஊழியத்தின் வளர்ச்சிக்காகவும் ஜெபியுங்கள்.

ஜூன் 09 பெல்ட்டா

பெத்லா, கிருஸ்மு, கேச்கி, கசன்பூர், ரேக்சனியா ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டியவர்கள் மத்தியில் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு பின்தொடர் ஊழியமும் செய்யப்பட்டது. சபையில் நடத்தப்பட்ட சுகமளிக்கும் கூட்டத்தில் அசுத்த ஆவியின் போராட்டத்திலிருந்த 3 பேருக்கு ஜெபத்தின் வாயிலாக விடுதலை கிடைத்ததற்காக துதியுங்கள். சரீர பெலவீனத்தோடு இருக்கிற இலிசபாவுக்கு சுகம் கிடைக்கவும், இப்பணித்தள ஊழியருக்காகவும், சபை வளர்ச்சிக்காகவும் ஜெபியுங்கள்.

ஜூன் 10 குராரு

பகேரா, கனௌசி, பலாகி, திலோரி, மர்ஹா, அஜாத் பீஹா, அமர்கர், கேக்டா, கர்ஜு பீஹா, பாரா ஆகிய இடங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக 100 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. வயிற்று வலியினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த சுலேகாதேவி, காச நோயினால் பாதிக்கப்பட்டிருந்த ராஜ்குமார், இரத்தப் போக்கினால் கஷ்டப்பட்டு கொண்டிருந்த பூனம் தேவி ஆகியோருக்கு ஜெபத்தின் வாயிலாக கிடைத்த சுகத்திற்காக துதியுங்கள். சுந்தரிதேவி என்ற சகோதரிக்கு குழந்தைச்செல்வம் கிடைக்கவும், இப்பணித்தள ஊழியருடைய மனைவியின் சரீர ஆரோக்கியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

மகய் I கோட்டம்

ஜூன் 11 பேலாகஞ்ச்

கோர்கடா, காம்தா, மகுத்பூர், மகரோலி ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. 52 பேருக்கு புதிய ஏற்பாடு கொடுக்கப்பட்டது. சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக 350 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. ஊழியத்திற்கு விரோதங்கள் இருப்பினும் வீட்டு கூட்டங்கள், உபவாச கூட்டங்கள், சிறப்பாக நடைபெற்று வருவதற்காக துதியுங்கள். சபைக்கு விரோதமாக எழும்புகிற மருத்துவர் தாமோந்தரின் தகப்பனாரை தேவன் சந்திக்கும்படியாகவும், இப்பணித்தள ஊழியருடைய

பாதுகாப்பிற்காகவும், சரீர சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜுன் 12 ஜஹனாபாத்

இப்பணித்தளத்தில் இக்கோட்டத்தின் தலைமை அலுவலகம் செயல்பட்டுவருகிறது. இக்கோட்ட ஊழியர்களுக்காக நடத்தப்பட்ட ஒரு நாள் ஊழியர் கூடுகையில் கலந்து கொண்ட 24 ஊழியர்கள் இக்கோட்ட ஊழிய வளர்ச்சிக்காக ஜெபித்தார்கள். ஹிராமன்பீஹா, சேவன், சக்குராபாத், சாந்திபுரம் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக 500 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. 7 பேர் ஞானஸ்நானம் பெற்று சபை அங்கத்தினரானதற்காக துதியுங்கள். தன்னார்வ ஊழியர்கள் எழும்பவும், இப்பணித்தள ஊழியருடைய பெற்றோரின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஜுன் 13 நேஹல்பூர்

சாந்திபுரம், முங்கிலா பரியாரி, கனியாரி, மிர்ஜாபூர், சலேம்பூர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. புதிய ஏற்பாடு 50 பேருக்கு விநியோகிக்கப்பட்டன. சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக 100 பேருக்கு சுவிசேஷம் கடந்து சென்றதற்காகவும், சுபாஷ்சிங்கிற்கு அசுத்த ஆவியின் கட்டுகளிலிருந்து ஜெபத்தின் வாயிலாக கிடைத்த விடுதலைக்காகவும் துதியுங்கள். ரச்னா குமாரியின் நீண்டநாள் வயிற்றுவலி குணமாகவும், இப்பணித்தள சபையில் தேவ கரம் வெளிப்படவும், இப்பணித்தள ஊழியருடைய உறவினர்களுடைய இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஜுன் 15 பீஹார் செரீ:்ப்

தரோகாபீஹா கிராமத்தில் முதல் முறையாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு ஆர்வமுள்ளவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. புதிய ஏற்பாடு மற்றும் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக 150 பேருக்கு சுவிசேஷம் கடந்து சென்றது. நீண்ட நாட்களாக சுகவீனமாக இருந்த மம்தாதேவி என்ற சகோதரிக்கு ஜெபத்தின் வாயிலாக தேவன் சுகம் கொடுத்ததற்காக துதியுங்கள். குழந்தைப் பாக்கியம் இல்லாமலிருக்கும் சங்கீதாதேவிக்கு கர்த்தர் அற்புதம் செய்யும்படியாகவும், இப்பணித்தள ஊழியருடைய சரீர சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூன் 16 ஹில்ஸா

இப்பணித்தளத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக 150 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. விசுவாசிகளின் வீடுகளில் ஜெபங்கள் நடத்தப்பட்டது. சோனிதேவியின் நீண்டநாள் தலைவலி ஜெபத்தால் சுகமானதற்காகவும், மம்தாகுமாரி அசுத்த ஆவியின் கட்டிலிருந்து விடுதலை பெற்றதற்காகவும் துதியுங்கள். இப்பணித்தள சபை வளர்ச்சிக்காகவும், இப்பணித்தள ஊழியருடைய உறவினர்களின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூன் 17 சகுராபாத்

தரம்புரா, ககன்குரா ஆகிய புதிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக 300 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு பின்தொடர் ஊழியம் செய்யப்படுகிறது. தனிநபர் ஊழியத்தின் வாயிலாக பிரசாந்த், பரசுராம், நாகமணிபாஸ்வான், முகேஷ் குமார் ஆகியோர் புதிய தொடர்பில் உள்ளனர். ஹசன்பூர் கிராமத்தில் உள்ள பள்ளியில் மாணவர்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்க வழி திறந்தமைக்காக துதியுங்கள். இப்பணித்தளத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் அந்தகார சக்திகள் அழிக்கப்படவும், இப்பணித்தள ஊழியருடைய மனைவியின் பெற்றோர் இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.

ஜூன் 18 ஷியாம்நகர்

ரானாபூர், பாச்சோ பீஹா ஆகிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிதியின் வாயிலாக 80 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. ஞாயிறு ஆராதனை, உபவாசஜெபம், சிறுவர் ஊழியம், வீட்டுக் கூட்டங்கள் தேவனது கிருபையால் தடையின்றி நடைபெற்று வருகிறது. பிரிந்திருந்த பார்வதி தேவி, சம்புதாஸ் குடும்பம் ஜெபத்தினால் ஒன்று சேர்ந்ததற்காக துதியுங்கள். இப்பணித்தளத்தில் உள்ள கிராமங்களில் கிரியை செய்யும் அந்தகார சக்திகள் செயலிழந்து போகவும், இப்பணித்தள ஊழியருடைய பிள்ளைகளின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூன் 19 ஏகன்கர் சராய்

பணித்தளத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு 40 பேருக்கு பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. தனிநபர் ஊழியத்தின்

வாயிலாக வாசுதேவ் யாதவ், பிந்தேஷ்வர் பண்டித், சகுந்தலா தேவி, உஷாதேவி, தினேஷ்ராம் ஆகியோர் புதிய தொடர்பில் உள்ளனர். விசுவாசிகளுடைய வீடுகளில் ஜெபக்கூட்டம் தவறாமல் நடைபெற்று வருவதற்காகவும், ஞாயிறுஆராதனை, பெண்கள் கூட்டம், சிறப்பாக நடைபெற்று வருவதற்காகவும் துதியுங்கள். சபை விசுவாசிகள் விசுவாசத்தில் வளரவும், பணித்தளங்களில் காணப்படும் எதிர்ப்புகள் மாறவும் ஜெபியுங்கள்.

ஜூன் 20 மகத் காலனி

முஸ்தாபாபாத், கேந்துவா, பீம்கர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டியர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. விசுவாசிகளுடைய வீடுகளில் ஜெபக்கூட்டம் நடைபெற்றது. சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக 150 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. அஜய் பாஸ்வான் குடும்பத்தில் காணப்பட்ட பிசாசின் போராட்டங்கள் ஜெபத்தால் விலகியதற்காகவும், எதிர்ப்பின் மத்தியிலும் ஊழியம் சிறப்பாக நடைபெற்றதற்காகவும் துதியுங்கள். ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் சுபோத் உபாத்யாய் இயேசுவை ஏற்றுக் கொள்ளவும், இப்பணித்தள ஊழியருடைய பெற்றோர்களுடைய சரீர ஆரோக்கியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

மகய் கோட்டம் 2

ஜூன் 21 கோடர்மா

இப்பணித்தளத்தில் இக்கோட்டத்தின் தலைமை அலுவலகம் செயல்பட்டுவருகிறது. இக்கோட்ட ஊழியர்களுக்கான ஒரு நாள் ஊழியர் கூடுகையில் கலந்து கொண்ட 27 ஊழியர்கள் இக்கோட்ட ஊழிய வளர்ச்சிக்காக ஜெபித்தார்கள். சபை ஆராதனை, பெண்கள் ஐக்கிய கூடுகை, உபவாசக் கூடுகை தடையின்றி நடைபெற்று வருவதற்காக துதியுங்கள். இக்கோட்டத்தின் அனைத்து ஊழியர்களுக்காகவும், ஊழியர்களின் பாதுகாப்பிற்காகவும், இப்பணித்தள ஊழியருடைய பிள்ளைகளுடைய படிப்பிற்காகவும், இங்கு செயல்ப்பட்டுவருகிற ஜெம்ஸ் ஆங்கிலப்பள்ளியில் படித்துவருகிற மாணவ, மாணவியரின் படிப்பு மற்றும் ஆசிரியர் தேவை சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

ஜூன் 22 டோம்சச்

மாயாடிக், துமாடிக் ஆகிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதியின் வாயிலாக 200 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. காளிமன்டா, துரோடிக், மகேஷ்பூர் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. கோமு பகுதியில் நடத்தப்பட்ட சுவிசேஷக் கூட்டத்தின் வாயிலாக 300 பேருக்கு சுவிசேஷம் கடந்து சென்றமைக்காக துதியுங்கள். இப்பணித்தளத்தில் ஊழியத்திற்கு விரோதமாக எழும்பும் அரசியல்வாதிகளை தேவன் சந்திக்கும்படியாகவும், இப்பணித்தள ஊழியருடைய தாயாரின் சரீர சுகத்திற்காகவும், இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூன் 23 தாவூதுநகர்

ஆரைய், கந்தன்பீஹா, மேல்லா பீஹா ஆகிய இடங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. விசுவாசிகளின் வீடுகளில் ஜெபக் கூடுகை நடத்தப்பட்டது. இப்பணித்தள சபையில் நடத்தப்படுகிற ஆராதனை, சிறப்புக் கூடுகையின் வாயிலாக தேவன் விடுதலையையும், அற்புதங்களையும் செய்து வருகிறார். தாவூதுநகர், ஓப்ரா, ஹஸ்புரா ஆகிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் கடந்து சென்றதற்காகவும், அசுத்த ஆவியின் போராட்டத்திலிருந்து ஜெபத்தின் வாயிலாக ராதாதேவிக்கு கிடைத்த விடுதலைக்காகவும் துதியுங்கள். இப்பணித்தள ஊழிய வளர்ச்சிக்காகவும், ஊழியருடைய பிள்ளைகளுடைய படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூன் 24 மான்பூர்

கிழக்கு மண்டல ஊழியர்களுக்கான சிறப்பு கூடுகையில் மூன்று கோட்டங்களிலிருந்து 78 ஊழியர்கள் கலந்து கொண்டார்கள். ஊழியங்களுக்காகவும், ஊழியர்களுடைய ஊழிய பயண பாதுகாப்பிற்காகவும் ஜெபித்தார்கள். மீராபீஹா, டுடுவா, டெகுரி, மன்சா, பஹாட்தளி, கோரே, சிமரியா, சோந்தி ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. தனிநபர் ஊழியத்தின் வாயிலாக புதிய தொடர்பில் உள்ள ரவிகாந்த்குமார், கீரன்தேவி, பாயிஜூபன்டிட், மாத்கர்குமார், வினோத் மாஞ்சி ஆகியோருக்காக துதியுங்கள். இப்பணித்தள ஊழியர் பராமரித்து வருகிற காப்பக பிள்ளைகளுக்காகவும், கண்பார்வை குறையோடுள்ள இரண்டு

வயது சிறுவன் அர்பித்ராஸ்க்கு சுகம் கிடைக்கவும், இப்பணித்தள ஊழியருடைய உறவினரின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூன் 25 ஔரங்காபாத்

சிமிரி, கங்குகார், சிமிரிகோட்டி ஆகிய இடங்களில் ஜெம்ஸ் மருத்துவக் குழுவினருடன் இணைந்து ஊழியம் செய்யப்பட்டது. இப்பணித்தளத்தில் ஜெம்ஸ் ஆங்கிலப்பள்ளி புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விசுவாசிகளுடைய வீட்டில் ஜெபக்கூட்டம் நடத்தப்பட்டது. அசுத்த ஆவியின் கட்டுகளிலிருந்து ஜோகன் பாஸ்வானுக்கு விடுதலை கிடைத்ததற்காக துதியுங்கள். குழந்தைப் பாக்கியம் இல்லாதிருக்கிற லால்சா, சங்கீதா, உஜ்வாலா ஆகியோரின் கர்ப்பம் ஆசீர்வதிக்கப்படவும், ஹரிபரி கிராம மக்கள் மத்தியில் அறிவிக்கப்பட்ட வசனம் கிரியை செய்யவும், இப்பணித்தள ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

ஜூன் 26 பாரூன்

இப்பணித்தளத்தில் செயல்படுகிற "நம் மக்கள்" நலத்திட்டத்தின் வாயிலாக 50 சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். காளிசோக், ஷோஸா, கைரா ஆகிய கிராமங்களில் ஆர்வம் காட்டியவர்கள் மத்தியில் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. தனிநபர் ஊழியத்தின் வாயிலாக சுரேஷ்குமார், பின்டுகுமார், ராஜேஷ்குமார் ஆகியோர் புதிய தொடர்பில் உள்ளனர். மனநலம் பாதிக்கபட்டிருந்த சுனில்குமார் என்ற சகோதரருக்கு ஜெபத்தின் வாயிலாக சுகம் கிடைத்ததற்காக துதியுங்கள். நலத்திட்ட பிள்ளைகளுக்கு போதிக்கப்படுகிற வசனம் கிரியை செய்யவும், சபை வளர்ச்சிக்காகவும் ஜெபியுங்கள்.

ஜூன் 27 ரூபாஸ்பூர்

முர்ஹாரா, ரூபாஸ்பூர், கோபால்பூர் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. தனித்தாள் ஊழியத்தின் வாயிலாக சுமித்ராதேவி, சுபேதார் சர்மா, துத்நாராயன் சிங் ஆகியோர் சந்திக்கபட்டனர். சுமித்ராதேவி அசுத்த ஆவியின் கட்டுகளிலிருந்து ஜெபத்தின் வாயிலாக விடுதலை பெற்றமைக்காக துதியுங்கள். முர்ஹாரா, ருபஷ்பூர் ஆகிய கிராமங்களில் அந்தகார சக்திகள் அழிக்கப்படவும், அடிக்கடி பெலவீனப்படுகிற இப்பணித்தள ஊழியருடைய மனைவியின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜுன் 28 ஒப்ரா

மாயாபூர், மேத்தன், சுர்க்கி பேலா, கஞ்சன்பீஹா, அதௌளரைலி, புட்வா, அஸரும்பி ஆகிய இடங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. அக்பர்பூர், ஆஜிம்சக், பச்ருக்கி, கோகிஜா, தாளி ஆகிய இடங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. அக்பர்பூர் பகுதியில் இந்து, முஸ்லீம் இடையே ஏற்படுகிற பிரச்சனைகள் மாறவும், சபையில் விசுவாசிகள் எண்ணிக்கை பெருகவும், இப்பணித்தள ஊழியருக்காகவும் ஜெபியுங்கள்.

ஜுன் 29 சூரி

ஹவல்பூர், ஜோல்பீஹா, கல்தாஸ்பூர், நவ்வாபீஹா, போன் ஆகிய கிராமங்களில் ஆர்வம் காட்டியவர்கள் மத்தியில் சுவிசேஷக் கைப்பிரதியின் வாயிலாக 150 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. 50 பேருக்கு புதிய ஏற்பாடு கொடுக்கப்பட்டது. மீனா என்ற சகோதரிக்கு அசுத்த ஆவியின் போராட்டித்திலிருந்து ஜெபத்தின் வாயிலாக கிடைத்த சுகத்திற்காக துதியுங்கள். காசநோயினால் பாதிக்கப்பட்டுள்ள அஜய்க்கு சுகம் கிடைக்கவும், இப்பணித்தள ஊழியரின் மனைவியின் சரீர ஆரோக்கியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜுன் 30 வர்சிலிகஞ்ச்

கோன்டுபர், அப்சடு, லால்பீஹா, பிர்னமா, ஜலால்பூர் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. தனிநபர் ஊழியத்தின் வாயிலாக ஆர்வம் காட்டிய சந்தாதேவி, சுனித்தாதேவி, தெதரி மாஞ்சி, மனீஷ் மாஞ்சி ஆகியோர் புதிய தொடர்பில் உள்ளனர். சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டிய 80 பேருக்கு புதிய ஏற்பாடு விநியோகிக்கப்பட்டன. குழந்தைப் பாக்கியம் இல்லாதிருக்கிற சரித்தா, அமித்தா, ரூபி ஆகியோருடைய கர்ப்பம் ஆசீர்வதிக்கப்படவும், இப்பணித்தளத்தில் சொந்தமாக ஆலயம் கட்டப்படவும் ஜெபியுங்கள்.

GEMS Action Centers

Chennai	No. 8, 3rd Jeevan Nagar, Adampakam, Chennai - 600088 Ph. 044-22670099
Coimbatore	No.2, Anbu Nagar, 4th Street, Vadavalli Road, Edayarpalayam, Coimbatore - 641025 Mobile : +919344824072
Dindugal	43/20C. Samiyar Thottam, Nagal Nagar, Dindugal - 624003 Cell : +919942824035
Erode	No. 34/20, Murugesan Nagar Main Road, Kumalankuttai, Erode - 638011 Cell: +919486976202
Kodaikanal	No. 1/199-1F, Packiapuram, Kodaikanal - 624101. Cell : +919443221776
Kovilpatti	No 11, Theppakulam street, Kovilpatti - 628501, Ph. : 04632-225890
Marthandam	N.S.Building, Kulasekaram Road, Marthandam, K.K. Dist., - 629165 Cell : +919788689771, +919486357950
Nazareth	No. 3, Dasan street, Nazareth - 628617, Ph. : 9442094110
Sivakasi	3/1350/9, Sathur Road, Parraipatti, Sivakasi - 626189 Cell : +919843088840
Nagercoil	66-E, Bright street, Nagarcoil - 629009 Cell : +919894965520
Tuticorin	38, Sarangapani street, Tuticorin - 2, Cell : +919442210629
Tuticorin	J.S.Traders, Hotel Geetha Complex, Polepettai, Tuticorin - 628002 Cell : +919442166061
Vellore	Shalom Cottage, 52, Vana Nagar, Alamelumangapuram, Vellore - 632009 Cell : +919952545181

REGIONAL ACTION CENTERS

Chennai	Plot No. 19-A, 3rd street, Megala Nagar, Vengaivasal - 600073, Cell : +919444763141
Coimbatore	No. 7, Laxmi puram, 1st Cross, EB Colony, TVS Nagar, Coimbatore - 641025 Cell : 9442934613
Trichy	Mahanaim, 1, Abdul Gazoor street, Kajah Nagar - 620020 Cell : +919443555577
Tirunelveli	14/109A, 10th Street, Shanthi Nagar, Palayamkottai - 627002 Cell: +919443113322

General Action Center - TamilNadu

GEMS, No. 14, Jeba Nagar, Vasanthapuram South, Near Vijaya Garden, Tirunelveli - 627005 Email : nellaioffice@gemsbihar.org Mobile : 9488771655

Promotional Coordination Center - TamilNadu

No. 21, Sharon Church Street, Booman Nagar, Madurai-625018
Email : tnpromotions@gemsbihar.org Mobile : +919865583563

OTHER STATE ACTION CENTERS

Bangalore	No. B-9, Gogappa Layout, Near Railway Gate, K G Halli, A C Post, Bangalore - 560045 Tel: +91 9448517025
Navi Mumbai	Plot No 58, Nandanvan CHS, Lane - 3, Sector - 17, Nerul (East), Navi Mumbai - 400 706 Cell : +919322730294 +919820701775
Pondicherry	No. 5, Kamarajar Street, Tagore Nagar, Lawspet, Pondicherry - 605008 Cell : +919486796631
Kerela	No. 4, N.V. Nagar, Peroorkada (P.O), Trivendram, Kerala - 682005 Mobile : +919486357950

GEMS National Action center

No: 29, Church street 1st Cross, Near Simpolo Tiles shop,
Kalkere Main Road, Horamavu, Bangalore -560043
Tel: +91 9443429735 E-Mail : promotions@gemsbihar.org

ஜெம்ஸ் ஆங்கிலப் பள்ளி திறப்பு விழா
ஔரங்காபாத், பீஹார்

ஔரங்காபாத் அருகில் உள்ள ரத்தன்புரா பணித்தளத்தில் புதிதாகக் கட்டப்பட்ட ஜெம்ஸ் ஆங்கிலப்பள்ளி, ஏப்ரல் 5 அன்று ஜெபத்துடன் திறந்துவைக்கப்பட்டது. தலைவர்கள், ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணித்தள விசுவாசிகள் கூடியிருக்க, ஜெம்ஸ் கல்வி ஊழியங்களைப் பற்றியும், தரமான கல்வியுடன் வெளிச்சமாக கர்த்தரையும் அறிவிக்கவேண்டிய அவசியத்தையும் கூடிவந்தோரிடம் பகிர்ந்துகொண்டார் சகோதரர் அகஸ்டின் ஜெபக்குமார். பள்ளிக் கட்டிடங்கள், வகுப்பறைகள், பேருந்துகள் மற்றும் ஊழியர்கள் தங்குமிடங்களை ஜெம்ஸ் தலைவர்கள் ஜெபத்துடன் திறந்துவைத்தனர்.

Regd. office :

GEMS Educational Media Services

11,13th Cross Street, New Colony,
Chrompet, Chennai - 44
Ph : 044-22386031, 044-22380295

Field. office :

GEMS, Sikaria, Indrapuri - 821 308
Rohtas Dist., Bihar. Ph. : 06184 234567

(Railway station & couriers centre : Dehri-on-Sone)
Website : www.gemsbihar.org.
E-mail : gems@gemsbihar.org

if undelivered please return to

GEMS Action Center

14, Jeba Nagar,
Vasanthapuram South,
Near Vijaya Garden,
Tirunelveli - 627 005. Ph : 9488771655
E-Mail : nellaioffice@gemsbihar.org

To

....

....

....

....

Private circulation

தனிப்பிரதி ரூ. 10-
ஆண்டு சந்தா ரூ. 100-